செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 273 நாள்: 11/05/17

முகாம்
தேதி மாற்றம்
(Revised) திருத்திய பத்திரிக்கை செய்தி

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,
வேலூர் மாவட்டம்,
வேலூர்.

நாள் : 11 .05.2017.

# பத்திரிக்கை செய்தி

## அரசு புறம்போக்கு குளங்களிலிருந்து மண் / வண்டல் மண் / சவுடு / கிராவல் / ஏனையவை இலவசமாக எடுக்க அனுமதி வழங்க 13.05.2017 அன்று சிறப்பு முகாம்

தமிழ்நாடு அரசு பொது மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு அவர்களின் சொந்த நோக்கத்திற்காகவும் விவசாய நிலங்கள் சமம்படுத்தும் நோக்கத்திற்காகவும் அரசாணை எண் 233 (எம்.எம்.சி.2) தொழில்துறை நாள்:23.09.2015-ன் படி 1959ம் வருடத்திய தமிழ்நாடு சிறு கனிம சலுகை விதிகளில் விதி எண்.12(2), 12(2-A)(a) மற்றும் அரசாணை எண்.50 தொழில்துறை நாள்:27.04.2017 ஆகியவற்றின் படி வகுத்துள்ள வழிமுறைகளின்படி வேலூர் மாவட்டத்தில் பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறை பராமரிப்பில் உள்ள கண்மாய்/குளம் ஆகியவற்றில் மண்/ வண்டல் மண்/சவுடு/ ஏனையவை எடுக்க தகுதி வாய்ந்த குளம்/கண்மாய்களில் பட்டியல்கள் அனைத்து வட்டாட்சிர்கள்/பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறையிடமிருந்து பெறப்பட்டு 974 குளங்கள்/கண்மாய்களிலிருந்து மண்/வண்டல் மண்/சவுடு ஏனையவை எடுக்க தகுதி வாய்ந்தவை என அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட குளங்களின் பட்டியல் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி குளங்கள்/கண்மாயிலிருந்து பொது மக்கள்/விவசாயிகள் விவசாய தேவைகளுக்காக நஞ்சை நிலமாக இருந்தால் 75 க.மீ அல்லது 12.5 லாரிகள் 1

ஏக்கருக்கும், 185 க.மீ அல்லது 30.8 லாரிகள் 1 ஹெக்டேருக்கும் மற்றும் புஞ்சை நிலமாக இருந்தால் 90 க.மீ அல்லது 15 லாரிகள் 1 ஏக்கருக்கும், 222 க.மீ அல்லது 37 லாரிகள் 1 ஹெக்டருக்கும் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை மட்டும் எந்தவித கட்டணமும் செலுத்தாமல் மண்/வண்டல் மண்/சவுடு /ஏனையவை எடுத்துக் கொள்ளலாம். மேலும் பொதுமக்களுக்கு தங்கள் சொந்த தேவைகளுக்காக 30 க.மீ அல்லது 5 லாரிகள் எடுத்துக்கொள்ளலாம். மேலும் மண்பாண்ட தொழிலாளர்கள் மண் பானை செய்வதற்கு 60 க.மீ அல்லது 10 லாரிகள் அளவிற்கு எடுத்துக்கொள்ளலாம்.

அதற்கான அனுமதி வழங்கும் சிறப்பு முகாம் அனைத்து வட்டாட்சியர்கள், அலுவலகங்களிலும் 13.05.2017 (சனிகிழமை) காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நடைபெற உள்ளது.

எனவே, பொதுமக்கள் / விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி 13.05.2017 (சனிகிழமை) அன்று தாலுகா அலுவலகங்களில் நடைபெறும் சிறப்பு முகாமில் கலந்து கொண்டு தங்களுக்குத் தேவைப்படும் மண் / வண்டல் மண் / சவுடு / கிராவல் / ஏனையவை இலவசமாக பெற்றுக் கொள்ள மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொள்கிறது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்

10/5/17

10/5/17

செ.ம.தொ.
வேலூர் – 9.